# செய்தி வெளியீடு

**2019ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது**

**இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்**
**2019 நான்காம் காலாண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டு**

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,

பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

தொ.பே: 94-011-2147071  தொ.நகல்: 94-011-2877938  மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

…………………………………………………………………………………………………………….

2019 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குமான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

இலங்கையின் 2019 ஆம் ஆண்டிற்கான (தை தொடக்கம் மார்கழி) மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் (2010) ரூபா 9,889,379 மில்லியனை அடைந்துள்ளது. அதேவேளை 2018 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி ரூபா 9,668,600 மில்லியனாகும். தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிட்ட அறிவிப்பின்படி, 2019 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 2.3 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது

2019 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.4 சதவீதம், 27.4 சதவீதம், 58.2 சதவீதம் மற்றும் 6.9 சதவீதமாக பதிவு செய்துள்ளது.

2018 ஆம் ஆண்டின் கைத்தொழில் நடவடிக்கைகளினால் பதிவு செய்யப்பட்ட 1.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகள் 2.7 சதவீதத்தால் சாதகமாக விரிவடைந்துள்ளது**.** அதேவேளை 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் சேவை நடவடிக்கைகள் 2.3 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்துள்ளது**.** எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டில் பதிவான 6.5 சதவீத உயர் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும்போது விவசாயப் பணிகள் 2019 ஆம் ஆண்டில் சிறிய நேர் 0.6 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது.

**விவசாய துறையின் செயற்பாடு**

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், பெரும்பாலான முக்கிய விவசாய நடவடிக்கைகள் அவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு சுருக்கத்தையே பதிவு செய்துள்ளன. 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் விசேடமாக மொத்த தேசிய உற்பத்திக்கு அதிக சதவீத பங்கை வழங்கும் 'கடல் மீன்பிடி', **'**நெல் வளர்ச்சி**'** போன்ற நடவடிக்கைகள் மற்றைய விவசாய நடவடிக்கைகளுடன் ஒப்பிடும்போது 5.5 சதவீத, 0.3 சதவீத மறை வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளன. மேலும் **'**தானியங்களின் வளர்ச்சி**'**, 'இறப்பர் வளர்ச்சி', 'தாவரபரப்புதல்', 'காடாக்கலும் குத்திகளும்', 'தேயிலை வளர்ச்சி', 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி**'**, என்பன முறையே 9.5 சதவீத ,9.5 சதவீத**,** 6.3 சதவீத**,** 4.8 சதவீத**,** 1.3 சதவீத மற்றும் 1.0 சதவீதத்தால் மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. எனினும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது**,** 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக', 'பழங்களின் வளர்ச்சி', 'கால்நடை உற்பத்தி**'**, 'நன்னீர் மீன்பிடி', 'காய்கறிகளின் வளர்ச்சி**'**.,என்பன முறையே 18.2 சதவீத, 8.5 சதவீத, 3.2 சதவீத, 3.0 சதவீத, 1.5 சதவீதங்களால் நேர் வளரச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

**கைத்தொழில் துறையின் செயற்பாடு**

கைத்தொழில் துறை நடப்பு விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 27.4 சதவீத பங்களிப்பை செய்ததுடன், முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது**,** 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 2.7 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு மேலும் தொடர்ந்து விரிவடைகிறது.. மொத்த உற்பத்தி நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் 1.9 சதவீதத்தால் மேலும்

விரிவடைந்திருப்பதுடன், 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி', நடவடிக்கைகள் முறையே 3.4 சதவீத, 3.9 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் ஆதரவளித்துள்ளன. மேலும் 'நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள் உற்பத்தி', 'இரசாயன பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்துகள் உற்பத்தி', 'பொறி மற்றும் இயந்திரம் உற்பத்தி', 'ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்' நடவடிக்கைகள் முறையே 23.4 சதவீத, **3.9** சதவீத **1.0** சதவீத மற்றும் **0**.4 சதவீத குறிப்பிடத்தக்க நேர் வளர்ச்சி வீதங்களால் ஆதரவளித்துள்ளன எவ்வாறினும் 'மர, மர உற்பத்திகள் மற்றும் நிலக்கரி', 'இறப்பர் மற்றும் பிளாத்திக்கு பொருட்கள் உற்பத்தி'. 'கடுதாசிப் பொருட்கள் உற்பத்தி' மற்றும் 'அடிப்படை உலோக மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக பொருட்கள் உற்பத்தி', , நடவடிக்கைகள் முறையே இக் காலப் பகுதியில், 7.9 சதவீத, 5.8 சதவீத, **4**.4 சதவீத மற்றும் **3.7** சதவீத மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

கைத்தொழில் பிரிவுகளுக்கிடையில் 'மின்சாரம்,வாயு,நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' ,'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' என்பன முறையே 4.0 சதவீத மற்றும் 5.5 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' 2.8 சதவீதத்தால் வீழ்ச்சியை காட்டுகின்றது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கைத்தொழில் துறையின் உயர் பங்களிப்பாளரான (7.5 சதவீத) 'கட்டிடவாக்கச் செயற்பாடுகள்' 4.0 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது.

**சேவைத் துறையின் செயற்பாடு**

முன்னைய வருடம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2019 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் மூன்று பிரதான பொருளாதார நடவடிக்கைகளுக்கிடையில் (விவசாயம், கைத்தொழில், சேவைகள்) சேவைத் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை (58.2 சதவீத) வழங்குவதுடன் 2.3 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான 'தொலைத்தொடர்பு' 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்', 'மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்', 'ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்' என்பன குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 17.2 சதவீத, 13..1 சதவீத, 5.8 சதவீத, 3.0 சதவீத, மற்றும் 2.1 சதவீதத்தை தாங்கி நிற்கிறது. அதேவேளை 'நிதிச் சேவை நடவடிக்கைகள்' முன்னைய ஆண்டுகளைப் போலல்லாமல், முன்னைய வருடம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2019 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் **2.0** சதவீத சிறிய நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. எவ்வாறாயினும் முன்னைய வருடம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, உப பிரிவான 'தங்குமிடம் உணவு மற்றும் குடிபானப் பணிகள்', சுற்றுலாத்துறையில் ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை பாதகமான தக்கைத்தை இன்னும் காட்டுவதால், இக் கால இடைவெளியில் **4.6** சதவீத சுருக்கத்தை பதிவு செய்கிறது.

**201**9 **நான்காம் காலாண்டுக்கான செயற்பாடு**

2019 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் ரூபா 2,737,830 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும் போது 2.0 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளதெனெ தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகிறது. 2019 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில் கைத்தொழில் துறை 1.4 சதவீத விரிவையும், சேவைத் துறை 2.7. சதவீத நேர் வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்கின்றது. இவ்வேளையில் விவசாய துறையின் செயற்பாடு, 4.1 சதவிகித மறை வளர்ச்சி வீதமே பதிவாகியுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான மற்றும் நான்காம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் அரச அறிவித்தலின் வெளியீட்டின்படி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.statistics.gov.lk

கலாநிதி ஐ.ஆர். பண்டார

பதில் பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்